Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 32 of 2020**

Deposition of P.W. 14 (L.W. 15 ) } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திரு. பௌலோஷ் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.03.2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சிறப்பு இலக்குபடை சத்தியமங்கலத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.12.2019ம் தேதி

பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.அருள்வடிவழகன் பதிவு செய்த பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 360/2019 சட்டபிரிவு 294(பி), 324, 506(2) இதச வழக்கை பஅவர் முதல் கட்ட விசாரணை முடித்து எனது மேல் விசாரணைக்கு வைத்ததை நான் பெற்று கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் வெங்கடேசன், தமிழரசன், ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் ஸ்டாலின், ஜெகதீசன், ராஜா, அண்ணாமலை, செல்வம் ஆகியோர்களை விசாரித்தேன். அவர்கள் உதவி ஆய்வாளரிடம் சாட்சியம் அளித்தது போல் என்னிடமும் கூறியதால் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2) எனது புலன் விசாரணை அடிப்படையில் இவ்வழக்கின் சட்டபிரிவு 294(பி), 324, 506(2) இதசவிலிருந்து சட்ட 294(பி),307 இதசவாக மாற்றம் செய்து 28.12.2019 அன்று சட்ட மாறுதல் அறிக்கை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் எதிரி டேவிட் (எ) கணபதியை தேடி வந்த நிலையில் அவர் சாமியாபுரம் கூட்ரோடு பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின் படி அங்கு சென்று அவரை காரணம் கூறி கைது செய்தும், ஆஜர் சாட்சிகள் கழகவேந்தன், பெருமாள் ஆகியோர் முன்னிலையில்

விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தான் பெருமாளை குத்த பயன்படுத்தி சூரிகத்தியை மறைத்து வைத்த இடத்தை அடையாளம் காட்டி கத்தியை எடுத்து ஆஜர் செய்கிறேன என்று கூறினார். ஒப்புதல வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ***அ.சா.ஆ.9*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்படி எதிரி சாட்சிகளுடன் அழைத்து மெனசி - பாப்பிரெட்டிப்பட்டி ரோடில உள்ள பெரியாண்டிச்சி கோவில முன்புள்ள பள்ளத்தில் அருகில் இருக்கும் பாலத்தின் அடியில் இருந்து சுமார் 28 செமீ நீளமும், 3 செமீ அகலமும் கொண்ட சூரிகத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள முன்னிலையில மகஜரில கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ***அ.சா.ஆ.10*** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து எதிரியை தக்க திரேக பரிசோதனை செய்து பாரா காவலா வசம் ஒப்புவித்தேன். சாட்சிகள கழகவேந்தன், பெருமாள ஆகியோரை விசாரித்து வாக்குமூலம பதிவு செய்து, எதிரி மீது அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்து எதிரியை பாப்பிரெட்டிப்பட்டி கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். வழக்கின் சொத்துக்களை படிவம் 95 மூலம் பாப்பிரெட்டிப்பட்டி கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில்

ஒப்படைத்தேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து செய்தேன். அவருக்கு காயசான்று பெற்று சான்று வழங்கிய மருத்துவர் ரேகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அருள்வடிவழகன், காயம் பட்ட நபரின் வாக்குமூலத்தை மருத்துவமனையில் பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சிவகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டபிரிவு 294(பி), 307 இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவம் 27.12.2019ல் நடந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைதேர்தல் நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட நபர் சாட்சி தமிழரசனும் இருவரும் அத்தை மகன், மாமன் மகன் என்றால் இருவரும் உறவினர் என்று எனது விசாரணையில் தெரிய வந்தது. சம்பவ இடத்தில் பாதுகாப்பிற்காக நானும், வெளியூர் போலிசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தோம் என்றால் சரிதான்.

அந்த இடத்தில் வன்முறை நடந்து போலிஸ் தடியடி நடத்தி எல்லோரும் ஓடினார்கள் என்றாலும், அதை நான் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. அதுபோல் ஓடியதால் பெருமாள் கீழே விழுந்து கம்பியாலோ, வேறு எந்த கூர்மையான பொருள் மீது விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2) இந்த வழக்கின் புகார்தாரா் நேரடியாக சாட்சி இல்லை. கேள்விப்பட்ட சாட்சி தான் என்றால் சரிதான். வழக்கின் புகார்தாரர் காயம்பட்ட பெருமாளின் மூத்த மகன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகளை நானும், உதவி ஆய்வாளர் வடிவளகனும் விசாரித்துள்ளோம். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் தமிழரசன், ராஜா, ஸ்டாலின், ஜெகதீசன், ராஜா. இவர்கள் காயம்பட்ட பெருமாளுக்கு ரத்த உறவினர்களான என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. ஆனால் இவர்கள் எல்லோரும் ஒரே ஊர்க்காரர்கள். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் என்னிடம் புகார் கொடுக்கவில்லையா என்றால் அவர்கள் யாரும் கொடுக்கவில்லை. மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்து தான் உதவி ஆய்வாளர் சிவகுமார் சென்று மயக்க நிலையில் இருந்ததால் அவரது மகனிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். கண்ணுற்ற சாட்சிகள் எல்லோரும் காயம் பட்ட நபரின் ரத்த உறவுகள் என்றாலும், இதுபோல் சம்பவ நடந்திருந்தால் உடனடியாக புகார்

கொடுத்திருப்பார்கள் என்றாலும், சம்பவமே நடக்கவில்லை என்பதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது உதவி ஆய்வாளர் அருள்வடிவளகன் தான். உதவி ஆய்வளார் அருள்வடிவளகன் முதல் தகவல் அறிக்கையில் தான் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் தான் இந்த வழக்கை முழுவதும் புலன் விசாரணை செய்தார் என்றால் சரியல்ல. அவர் தயார் செய்து வைத்திருந்த அனைத்து குவிமுச 161 வாக்குமூலத்தை பதிவு செய்து வைத்திருந்தார் என்றாலும், நான் எந்த புலன் விசாரணையிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரியிடமும், சாட்சிகளிடமும் கையெழுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல.

4) ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான கழகவேந்தனிடம் நான் 18.12.2019ல் சம்பவம் நடப்பதற்கு முன்பாக பதிவு செய்து கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் கையெழுத்திற்கு கீழே தேதி தவறாக போட்டு விட்டேன். கண்ணுற்ற சாட்சிகளை உதவி ஆய்வாளர் வடிவளகன் தான் பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகள்

தமிழரசன், ராஜா. வெங்கடேசன் ஆகியோரை விசாரித்து நான் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) காவல் துறையினர் பொதுமக்களை தாக்கியதால் பொது மக்கள் ஓடியபோது பெருமாளுக்கும் அதில் காயம் ஏற்பட்டது என்றாலும், அரசு அலுவலர்களையும், அரசு அதிகாரிகளையும் காப்பாற்றுதற்காக பெருமாளின் மகனிடம் பொய்யாக புகார் வாக்குமூலம் பெற்று பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த குற்ற அறிக்கைக்கு ஏற்றாற் போல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற அறிக்கை நான் தான் தயார் செய்தேன். ஆயுள் தண்டனை கொடுக்க கூடிய குற்ற வழக்குகளில் ஆய்வாளர் தான் புலன் விசாரணை செய்ய வேண்டும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் விசாரித்து குவிமுச 161 வாக்குமூலம் பதிவு செய்துள்ளதால் குற்ற அறிக்கையே முற்று பெறாத குற்ற அறிக்கை என்றால் சரியல்ல. அந்த குற்ற அறிக்கையே பொய்யானது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த குற்ற வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.